# தக்காளி சாகுபடி

## மண் மற்றும் தட்பவெப்பநிலை

தக்காளி பயிரிட நல்ல வடிகால் வசதியுள்ள அங்ககப்பொருட்கள் நிறைந்த மண் மிகவும் ஏற்றது. மண்ணின் கார அமிலத்தன்மை 6.5-7.5 இருக்க வேண்டும். வெப்பநிலை 21-24$^0$ செ.கீ இருக்க வேண்டும்.

## பருவம்

மே-ஜுன், நவம்பர்-பிப்ரவரி சிறந்த பருவங்களாகும் இருப்பினும் நல்ல பாசன வசதி இருப்பின் வருடம் முழுவதும் பயிரிடலாம்.

## இரகங்கள்

கோ-1, கோ-2, கோ-3 (மருதம்), பி.கே.எம்-1, பூசாரூபி, பையூர்-1.

## விதையளவு

ஒரு ஏக்கர் தக்காளி பயிரிட 160 கிராம் விதை போதுமானது.

## விதைநேர்த்தி

விதைப்பிற்கு 24 மணி நேரத்திற்கு முன் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கேப்டான் (அ) திரம் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதைப்பதற்கு அரைமணி நேரத்திற்கு முன் 4 கிராம் டிரைகோடிடர்மா விரிடி (அ) 10 கிராம் சூடோமோனாஸ் புளுரோஸன்ஸ். பின் 80 கிராம் அசோஸ்பைரில்லம் கலவையில் (ஆறிய கஞ்சி+அசோஸ்பைரில்லம்) விதை நேர்த்தி செய்து, நிழலில் உலர்த்தி விதைக்கவும்.

## நாற்றங்கால்

ஒரு ஏக்கர் நடவுக்கான நாற்றுகள் உற்பத்தி செய்ய 2 சென்ட் (80 செ.மீ) போதுமானது. இதில் மேடைபாத்தி அமைத்து அதில் தொழுஉரம் 4 கிலோ/ச.மீ. வீதம் கலந்து தயார் செய்ய வேண்டும். அதில் வரிசை முறையில் விதைகளை விதைத்து மேலே வைக்கோல் கொண்டு பாத்திகளை மூடி பூவாளி கொண்டு நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

நாற்றங்காலில் நாற்று அழுகலை கட்டுப்படுத்த 2.5 கிராம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்து 1 லிட்டர் தண்ணீர் விகிதத்தில் கலந்து நாற்றின் வேர்ப்பாகம் நனையும்படி ஊற்ற வேண்டும்.

## நடவுமுறை

நடவு வயலை 2-3 முறை நன்கு உழவு செய்ய வேண்டும். 75 செ.மீ. இடைவெளியில் பார்கர் அமைத்து 45 செமீ. இடைவெளியில் செடிகள் நடவு செய்ய வேண்டும்.

## அடியுரம்

கடைசி உழவின் போது ஏக்கருக்கு அடியுரமாக 10 டன் மக்கிய தொழுஉரம், யூரியா 66 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 248 கிலோ, மூரியேட் ஆப் பொட்டாஷ் 32 கிலோ, போராக்ஸ் 4 கிலோ, சிங் சல்பேட் 20 கிலோ வீதம் இட்டு உழவு செய்ய வேண்டும்.

## மேலுரம்

நடவு செய்த 30வது நாள் ஏக்கருக்கு 60 கிலோ யூரியா இட வேண்டும்.

## பின்செய் நேர்த்தி மற்றும் நீர்ப்பாய்ச்சுதல்

மண்ணின் தன்மைக்கேற்ப நீர்ப்பியச்ச வேண்டும். நடவு செய்த 3வது நாள் உயிர்த் தண்ணீரும் பிறகு 7-10 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும். இறந்த, காய்ந்த செடிகளுக்கு பதில் புதிய செடிகள் நட வேண்டும். நடவு செய்த 15ம் நாள் மற்றும் மாதம் ஒரு முறை களை எடுக்க வேண்டும். ஒரு லிட்டர் புளுகுளோரலின் மருந்து (அ) 400 கிராம் பொன்டிமெத்தலின் மருந்து 500 லிட்டர் நீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு என்ற வீதத்தில் நாற்று நடுவதற்கு முன்னர் தெளிக்க வேண்டும்.

## பயிர் பாதுகாப்பு

### இலை சுருள் வைரஸ்

இந்நோய் வெள்ளை ஈ மூலம் பரவுகிறது. கோடை காலங்களில் மிகவும் அதிகமாக இருக்கும். டைகுளோரோவாஸ் 1 மி.லி/லி (அ) மீன் எண்ணெய் சோப் 25 கிராம்/லிட்டர் என்ற விகிதத்தில் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். மேலும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையின் கீழ்கண்ட முறையிலும் கட்டுப்படத்தலாம்.

- மஞ்சள் ஒட்டு அட்டை பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம்
- துத்தி போன்ற புகழிடங்களை அழித்தல்
- வேப்ப எண்ணெய் 3 மி.லி/லி.

### காய்ப்புழு

கீழ்கண்ட ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையில் காய்ப்புழு கட்டுப்படுத்தப்படுகிறது.

- எண்டோசல்பான் 35 EC 2 மி.லி/லி கார்பரில் 50 wp 2கிராம்/லி (அ) பேசில்லஸ் துரிஞ்சன்சிஸ் 2கிராம்/லி கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்
- இன கவர்ச்சி பொறி – ஏக்கருக்கு 5 எண்கள்
- முட்டை ஒட்டுண்ணி – 2000/ஏக்கருக்கு
- விஷ உணவு (நச்சுப் பொறி-2) (கார்பரில்-1.25 கிலோ, நெல் உமி/தவிடு-12.5 கிலோ, வெல்லம்-1.25 கிலோ + தண்ணீர் 7.5 லி/ஏக்கருக்கு)

**இலைப்புள்ளி நோய்**

டைத்தேன் M-45 – 2 கிராம்/லிட்டர். தண்ணீரில் விகிதத்தில் கலந்து தெளிக்க வேண்டும்.

**அறுவடை**

நட்ட 60வது நாளிலிருந்து வாரம் இருமுறை அறுவடை செய்யலாம்

**மகசூல்**

தக்காளி பயிரில் 125-135 நாட்களில் ஒரு ஏக்கருக்கு சாதாரண இரகங்கள் 14 டன்னும் வீரிய இரகங்கள் 30 டன்னும் மகசூலாக கொடுக்கிறது.

**சிறப்பு தொழில்நுட்பங்கள்**

- டிரைகான்டினால் 1 கிராம் 1000 லிட்டர் தண்ணீர் விகிதத்தில் கலந்து நடவு செய்த 15ம் நாள் மற்றும் பூக்கும் பருவத்திலும் தெளித்தால் மகசூல் அதிகரிக்கும்.
- ஜிப்ரலிக் அமிலம் 50 பிபிஎம் (அ) 2-4-டி 2 ppm உடன் ஒரு சதம் யூரியா கலந்து பூக்கும் தருணத்தில் தெளிப்பதால் மகசூல் அதிகரிக்கும்.